மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே ஒதுக்கப் பட்ட தொகுதிகளைத் தான் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதே தவிர, புதியதாக எதற்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. எதற்கும் தனியாகச் சலுகை அளிக்கப்படவில்லை. எனவே, மாயூரத் திற்கும் தனிச் சலுகை வழங்கப்படுவதற்கு இயலாது.

கோவையை மாநகராட்சியாக்கல்

* 325 வினு.—திரு. சு. துரைசாமி
திரு. ரா. ரா. முனுசாமி
திரு. பெ. சௌந்திரபாண்டியன்
திரு. வை. பால்சுந்தரம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையை மாநகராட்சியாக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) கோவை நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தும்படி கோரி கோவை நகர் மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி யுள்ளது. சிங்காநல்லூர் நகராட்சியும், கோவை, சிங்காநல்லூர் ஆகிய இரண்டு நகராட்சிகளையும் ஒருங்கிணைத்து மாநகராட்சியாக உயர்த்தும்படியும் கோரி தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : வர இருக்கிற நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களுக்குள் கோவையை மாநகராட்சியாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. அதில் தாமதம் ஏற்படுமானுல் கோவை நகராட் சித் தேர்தல் நடத்தப்படும். மாநகராட்சித் தேர்தல் இப்பொழுது இல்லை.

1973 நவம்பர் 22]

திரு. க. உரொ. எட்மண்ட்: பொதுவாக ஒரு நகராட்சியில் இருக்கின்ற மக்கள் தொகை, அந்த நகராட்சியினுடைய வருமானம் இவைகளைக் கணக்கில் கொண்டு ஒரு நகராட்சி மாநகராட்சியாக மாற்றப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகளில் கூடுதலான மக்கள் தொகையும், கூடுதலான வருமானமும் உள்ள நகராட்சிகளை உடனே மாநகராட்சியாக ஆக்குவதற்கு அரசாங்கத்திற்கு என்ன இடையூறுகள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஐந்து லட்சம் மக்களுக்குக் குறையாமலும், ஆண்டு வருமானம் 2 கோடி ரூபாய்க்கு மேலும் இருக்கும் அப்படிப்பட்ட நகராட்சிகளை மாநகராட்சிகளாக ஆக்குகின்ற உத்தேசம் இருக்கிறது. இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு நான் அடிக்கடி சொல்வது போல, திருச்சி, கோவை நகராட்சிகள் மாநகராட்சிகளாக ஆக்கப் படவேண்டும் என்ற திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது. பரிசீலனைக்குப் பிறகு முடிவு அறிவிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கோவையை மாநகராட்சி ஆக்குவதற்குச் சிங்காநல்லூர், கோவை ஆகிய இரண்டு நகராட்சி களையும் ஒன்றுக்கும் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தலைமையிடம் சிங்கநல்லூரில் அமையுமா அல்லது கோவையில் அமையுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இடம், தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

திரு. சொ. காவேரிமணியம்: நகராட்சி மாநகராட்சி ஆகுகின்ற நேரத்தில் அதில் சுற்றியிருக்கக்கூடிய சில ஊராட்சி, பேரூராட்சி மன்றங்கள் சேர்க்கப்படுகின்றன. அவ்வாறு சேர்க்கப்படும்பொழுது ஊராட்சி மன்றத்தில் எல்லை பூராவும் சேர்க்கப்படுவதுதான் நலமாகத் தெரிகிறது. சில சமயங்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியை சேர்த்துவிட்டு மற்ற பகுதியை விட்டு விடுகிறார்கள். இதில் அரசின் கருத்து என்னவென்று அறியலாமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதுரை நகராட்சியைப் பொறுத்த அளவில் ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். ஒரு ஊராட்சி மன்றம் பூராவாகவும் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

[1973 நவம்பர் 22

மாநகராட்சி எல்லைக்கும் எடுக்கப்படுகின்ற ஊராட்சி எல்லைக்கும் அதிக தொலைவு இருக்குமானால், அது பரிசீலனை செய்யப்பட்டு, அந்த மாநகராட்சியோடு சேர்க்கின்ற பகுதி போக மிச்சம் இருக்கிற பகுதி தனியாக இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகளும், வசதி வாய்ப்புகளும் இருக்குமானால் தனி ஊராட்சி மன்றமாக ஆக்கப்பட்டு, மற்ற பகுதியை மாநகராட்சியோடு இணைந்திருக்கிற பகுதியாக இருக்கும்படி ஆக்குகின்ற திட்டம் இருக்கிறது. மதுரை மாநகராட்சி சம்பந்தப்பட்டவரையில் அது வேண்டியதில்லை. அதோடு இணைக்கின்ற பகுதியைத் தனிப் பஞ்சாயத்து ஆக்காமல் மாநகராட்சியோடு இணைக்கப்படுவதற்கு அரசு சமீபத்தில் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தற்போதைய மதுரை நகராட்சியோடு எந்த அளவுக்கு எல்லைப் பகுதிகளை இணைத்து மாநகராட்சிக்கு ஏற்றதாகக் கொண்டுவரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சென்னை மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில், மதுரையிலும் சில பண கையாடல்கள் நடந்திருக்கின்றன என்பதை இப்பொழுது பத்திரிகை வாயிலாக அறிகிறோம். ஆகவே, கோவை நகராட்சியை மாநகராட்சி மன்றமாக ஆக்குவதற்கு முன்பு, மதுரை, கோவை நகராட்சிகளில் பினான்ஷியல் பொஸிஷன் எப்படி இருக்கிறது, பினான்ஷியல் ஸ்டேட்டஸ் எப்படி இருக்கிறது, பண வசதி எப்படி இருக்கிறது என்றெல்லாம் ஆராய்ந்து, இப்பொழுது ஏதாவது கையாடல்கள் நடந்துகொண்டிருக்கின்றனவா, பினான்ஷியல் இர்ரெகுலாரிடீஸ் இருக்கின்றனவா, தேவையான ஜனத்தொகை இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு கோவையை மாநகராட்சி ஆக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதுரை நகராட்சி பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னது போல எந்த தாக்கீதும் அல்லது புகார் எதுவும் வரவில்லை. மாநகராட்சியாக ஆக்குகின்ற பகுதி மட்டுமல்லாது, அப்படிப்பட்ட தவறுகள் எநத மாவட்டத்தில் எந்த ஊராட்சியில் இருந்தாலும், எந்த ஒன்றியத்தில் இருந்தாலும் சரி, எந்த நகராட்சியில் இருந்தாலும் சரி, எந்த மாநகராட்சியில் இருந்தாலும் சரி, அது அறிவிக்கப்படுமானால், நிச்சயம் அதைப்பற்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை கார்ப்பரேஷனில் எந்தெந்தப் பகுதிகள் இணைக்கப்படும்? குறிப்பாக மாடக்குளம் பஞ்சாயத்து இணைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாடக்குளம் பஞ்சாயத்தில் ஒரு பகுதி எடுக்கப்படவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களோடு நாங்கள் விவாதித்ததற்குப் பிறகு பூராப் பகுதியையும் எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து, மாடக்குளம் பூராவும் மாநகராட்சியோடு இணைக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

Lay off compensation to workers

* 240 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the tripartite committee constituted during 1973 to go into the award of lay off compensation to workers affected by the power cut has submitted its report; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மின்விசை வெட்டு குறித்து அரசு பிறப்பித்த ஆணைகளைச் செயற்படுத்துவதில் அவ்வப்போது பல சிக்கல்கள் எழுந்தன. இந்தச் சிக்கல்கள் தக்கமுறையில் கவனிக்கப்படவும், உழவர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் மற்ற வகையினருக்கும் ஏற்பட்ட இடையூறுகளைக் களையும் பொருட்டு இந்தச் சிக்கல்களுக்குத் தக்க தீர்வு காணவும் வேண்டியிருந்தது. மின்விசை வெட்டின் விளைவால் எழக்கூடிய சிக்கல்களைக் குறித்துத் தக்க முறையில் விரிவாக அறிந்துகொள்ள உதவும்பொருட்டும், அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தக்க ஏற்பாடுகளை வகுக்கும் பொருட்டும் மாநில அளவிலான குழுவொன்று 1973 பிப்ரவரியில் அமைக்கப்பட்டது. தொழில்துறை அமைச்சர் இதன் தலைவர். மின்சார அமைச்சரும் தொழிலாளர் நல அமைச்சரும் இதில் உறுப்பினர்கள். இக்குழுவில் தொழிலதிபர்களின் பிரதிநிதிகளும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் இடம் பெற்றிருந்தனர். இக்குழு அறிக்கை ஏதும் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.